ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் உருவாக்கிய "கொரோனா தடுப்பூசி'' முதல்கட்ட சோதனை வெற்றி

செப்டம்பரில் தடுப்பு மருந்து தயாராகும்

புதுடெல்லி, ஜூலை.21

இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் கொரோனாவுக்கு எதிராக உருவாக்கிய தடுப்பூசியின் முதல்கட்ட சோதனை வெற்றி பெற்றுள்ளது. மனிதர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது கண்டறியப்பட்டு உள்ளது. செப்டம்பரில் கொரோனா தடுப்பு மருந்து தயாராகி விடும் என பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் அங்கமான மருத்துவத் துறை சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் நூபீல்டு எனும் மையம், ஜென்னர் மையத்துடன் இணைந்து ஏஇஸ்டி–1222 என்ற பெயரில் தடுப்பு மருந்தை உருவாக்கி உள்ளது. இதற்கான மூலக்கூறு மருந்தை பிரிட்டன் ஸ்வீடிஷ் பார்மா நிறுவனமான அஸ்ட்ரா ஜெனிகா பிஎல்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது.

ஜென்னர் மையம் உருவாக்கியுள்ள (கோவிட்19) கொரோனா தடுப்பு மருந்து வைரஸ் தாக்குவதில் இருந்து நோயாளிகளுக்கு இரட்டை பாதுகாப்பு அளிக்கக் கூடியது. இந்த தடுப்பூசி முதற்கட்ட சோதனைக்காக கடந்த ஏப்ரல் மாதம் சுமார் 1000 பேருக்கு செலுத்தப்பட்டது.

இந்த தடுப்பு மருந்து உடலில் எதிர்ப்பு சக்தியை டி–செல்லில் உருவாக்கும். இதனால் உருவாகும் செல்கள் வைரஸ் மற்றும் பல்வேறு நோய் தொற்றிலிருந்து உடலை பாதுகாக்கக் கூடிய எதிர்ப்பு சக்தியை உருவாக்கும். மனித உடலில் உள்ள டி–செல்களானது மனித உடலில் இருக்கும் கடைசி நேரம் வரை நோய் தாக்குதலில் இருந்து மனிதர்களைக் காக்கும். அத்துடன் வைரஸ் வளர்வதைத் தடுக்கும். சமீபத்திய ஆய்வுகளில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளான நோயாளிகளின் உடலில் உருவான எதிர்ப்பு சக்தி 3 மாதங்களுக்குப் பிறகு செயலிழந்துவிடுவது தெரிய வந்துள்ளது.

ஆஸ்ட்ரா ஜெனிகா வெளியிட்டுள்ள தகவலின்படி செப்டம்பரில் கொரோனா தடுப்பு மருந்து தயாராகி விடும் என தெரிவித்துள்ளது.

டாக்டர் அட்ரியன் ஹில்

இதில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் உள்ள ஜென்னர் நிறுவனத்தின் இயக்குனரான டாக்டர் அட்ரியன் ஹில் கூறியிருப்பதாவது:–

இந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட அனைவரிடமும் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை கண்டுள்ளோம். தொற்றுநோயைத் தடுக்கும் மூலக்கூறுகளான நடுநிலையான ஆன்டிபாடிகள்

உற்பத்தி செய்யப்படுகின்றன. அத்துடன் உடலின் டி–செல்களில் ஒரு எதிர்வினையையும் இந்த தடுப்பூசி ஏற்படுத்துகிறது. இந்த செல்கள் கொரோனா வைரசை எதிர்த்துப் போராட உதவுகிறது.

ஏனெனில் கொரோனாவை கட்டுப்படுத்துவதில் டிசெல்லின் எதிர்வினை மற்றும் ஆன்டிபாடிகள் இருப்பது மிகவும் முக்கியமானது என்பதற்கான ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றன. இந்த தடுப்பூசியின் 2ம் கட்ட பரிசோதனையில் இந்த நோய் எதிர்ப்பு சக்தி மேலும் அதிகரிக்கலாம்.

மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்த்ரா செனிகாவுடன் இணைந்து இந்த தடுப்பூசியை ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் உலக அளவில் தயாரிக்கும். ஏற்கனவே 200 கோடி டோஸ்களுக்கு ஆர்டர் கிடைத்து உள்ளது.

இவ்வாறு அட்ரியன் ஹில் தெரிவித்தார்.

தலைமை ஆய்வாளர்

இதைப்போல ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக தடுப்பூசி பரிசோதனையின் தலைமை ஆய்வாளர் ஆண்ட்ரூ பொல்லார்டு கூறுகையில், இந்த தடுப்பூசி பரிசோதனையில் நம்பகமான முடிவுகள் கிடைத்திருப்பதாக தெரிவித்தார். இந்த தடுப்பூசி பாதுகாப்பானது, நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்தது என்பதை அறிந்து கொண்டதாக அவர் கூறியுள்ளார். இந்த தடுப்பூசியின் 2 மற்றும் 3ம் கட்ட பரிசோதனையும் ஏற்கனவே தொடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த தடுப்பு மருந்தானது லாப நோக்கமின்றி தயாரிக்கப்படுவதாக ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் 'கோவேக்சின்'

இந்தியாவைச் சேர்ந்த சீரம் இன்ஸ்டிடியூட் மையம் ஆஸ்ட்ரா ஜெனிகா மையத்துடன் இணைந்து இந்த தடுப்பு மருந்தை இந்தியாவில் தயாரிக்க உள்ளது.

இதற்கிடையே இந்தியாவின் பாரத் பயோடெக் மற்றும் ஜைடஸ் கேடிலா ஆகிய 2 நிறுவனங்களும் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை தயாரித்து உள்ளன. இதில் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த 'கோவேக்சின்' தடுப்பூசியை சோதிப்பதற்கு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை உள்ளிட்ட 12 மருத்துவ நிறுவனங்களை ஐ.சி.எம்.ஆர். தேர்வு செய்திருந்தது.

அதன்படி தடுப்பூசி பரிசோதனைக்கு முன்வரும் ஆரோக்கியமான தன்னார்வலர்களுக்கான முன்பதிவை நேற்று எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்கியது. முதற்கட்ட பரிசோதனைக்கு தேர்வு செய்யப்படும் 375 பேரில் சுமார் 100 பேர் எய்ம்ஸ் மருத்துவமனையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இங்கிலாந்தில் மேலும் 3 தடுப்பூசிகள்

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தை தவிர இங்கிலாந்தை சேர்ந்த மருந்து நிறுவனங்கள் மேலும் 3 வெவ்வேறு வகையான தடுப்பூசிகளை தயாரித்து உள்ளன. இந்த மருந்துகளை மனிதர்களிடம் பரிசோதிப்பதற்காக தன்னார்வலர்களை அரசு நாடியுள்ளது.

இதற்காக ஆன்லைன் பதிவகம் ஒன்றை திறந்துள்ள அரசு, அதில் தடுப்பூசி பரிசோதனைக்கு விரும்பும் இங்கிலாந்து குடிமகன்கள் தங்கள் பெயரை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தி உள்ளது.

ரஷியா

இந்த நிலையில், ரஷியாவை சேர்ந்த கமாலெயா ஆய்வு நிறுவனம் 2 தடுப்பூசிகளை தயாரித்து உள்ளது. இதுவும் மருத்துவ பரிசோதனையில் உள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சரின் உதவியாளரான குஸ்னட்சோவ் கூறுகையில், 'கமாலெயா நிறுவனம் தயாரித்த 2 தடுப்பூசிகளின் மருத்துவ பரிசோதனைகள் தொடர்கின்றன. அதிகாரப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட தன்னார்வலர்களுக்கு மட்டுமே இந்த தடுப்பூசி போடப்பட்டு உள்ளது. இந்த பரிசோதனை முடிந்தபிறகே தடுப்பூசி பதிவு உள்ளிட்டவை மேற்கொள்ளப்படும். இந்த தடுப்பூசி இதுவரை வர்த்தக நோக்கில் வெளியிடப்படவில்லை என்று தெரிவித்தார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள காசிமேடு விசைப்படகு மரம் விடும் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தலைவருமான ஆர்.எஸ். ராஜேஷை நேரில் சந்தித்து நிவாரணம், கடன் நிலுவை தொகை, மற்றும் உடற்பயிற்சி கூடம், உள்ளிட்டவைகளை வலியுறுத்தி கூட்டாக கோரிக்கை மனு வழங்கினர். மாவட்ட பொருளாளர் ஏ.கணேசன், மாவட்ட மீனவரணி செயலாளர் பி.ஜெகன், அருண்பிரசாத், சந்தனசிவா, ஹரிகிருஷ்ணன், எல்.அன்பு, கே.பி.கர்ணன், மற்றும் விசைப்படகு மீனவ சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

★ பாதிப்பு: 1 லட்சத்து 75 ஆயிரம் பேர்

★ டிஸ்சார்ஜ்: 1 லட்சத்து 21 ஆயிரத்து 776 பேர்

தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 50 ஆயிரத்து 800 பேருக்கு கொரோனா பரிசோதனை

ஒரே நாளில் 3,861 பேர் டிஸ்சார்ஜ்

சென்னை, ஜூலை.21–

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு 1 லட்சத்து 75 ஆயிரத்தை கடந்துள்ளது. இதுவரையில் 1 லட்சத்து 21 ஆயிரத்து 776 பேர் குணம் அடைந்துள்ளனர்.

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் 50 ஆயிரத்து 800 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 2,921 ஆண்கள், 2,064 பெண்கள் என 4,985 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த பட்டியலில், வெளிநாடுகளில் இருந்து வந்த 5 பேரும், வெளிமாநிலங்களில் இருந்து வந்த 50 பேரும், 12 வயதுக்கு உட்பட்ட 269 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட 695 முதியவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும் புதிய தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதிகபட்சமாக சென்னையில் 1,298 பேர், திருவள்ளூரில் 454 பேர், செங்கல்பட்டில் 354 பேரும், குறைந்தபட்சமாக பெரம்பலூரில் 7 பேர், நாகப்பட்டினத்தில் 3 பேர், திருப்பத்தூரில் 2 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இதுவரை 19 லட்சத்து 6 ஆயிரத்து 617 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதில் ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 678 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். இந்த பட்டியலில் 12 வயதுக்கு உட்பட்ட 8 ஆயிரத்து 776 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட 21 ஆயிரத்து 682 முதியவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

70 பேர் உயிரிழப்பு

கொரோனாவுக்கு அரசு



மருத்துவமனையில் 49 பேரும், தனியார் மருத்துவமனையில் 21 பேரும் என 70 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தனர். இதில் சென்னையில் 22 பேரும், திருவள்ளூரில் 9 பேரும், செங்கல்பட்டில் 7 பேரும், மதுரையில் 5 பேரும், திருச்சியில் 4 பேரும், காஞ்சீபுரம், புதுக்கோட்டையில் தலா 3 பேரும், கோவை, ராமநாதபுரத்தில் தலா இருவரும், விருதுநகர், விழுப்புரம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருப்பத்தூர், சேலம், ராணிப்பேட்டை, பெரம்பலூர், கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கடலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவரும் என 22 மாவட்டங்களில் உயிரிழப்பு நிகழ்ந்து உள்ளது. இதுவரையில் 2,551 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து 3 ஆயிரத்து 861 பேர் நேற்று குணம் அடைந்தனர். இதில் சென்னையில் 1,269 பேரும், காஞ்சீபுரத்தில் 296 பேரும், வேலூரில் 205 பேரும் அடங்குவர். இதுவரையில் 1 லட்சத்து 21 ஆயிரத்து 776 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 51 ஆயிரத்து 348 பேர் உள்ளனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பதிவு அலுவலகம்: டிசி எண். 14/2074–7, முத்தூட் சென்டர், புன்னேன் ரோடு, திருவனந்தபுரம் 695 034.
கார்ப்பரேட் அலுவலகம்: 12/ஏ 01, 13வது தளம், பரினீ கிரசன்ஜோ, மனை எண். சி 38 மற்றும் சி 39, பந்தரா குர்லா காம்ப்ளக்ஸ்–ஜி பிளாக் (கிழக்கு), மும்பை 400 051.

டிமாண்ட் நோட்டீஸ்

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (2) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ் அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13 (12) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ், கீழ்க்கையொப்பமிட்டுள்ள முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் கீழ்க்கண்ட கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு டிமாண்ட் நோட்டீஸ்களை அனுப்பி அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேற்சொன்ன கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் எம்எச்எப்சிஎல்–லுக்கு மேற்சொன்ன கடன்தாரர் கடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்கள்/எழுத்துபூர்வமான ஒப்புக்கொண்டபடி கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகை மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் ஆண்டுக்கு 18% மேலும் வட்டி ஆகியவற்றை இந்த அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் மீண்டும் அறிவிக்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்துவதற்காக மேற்சொன்ன கடன்தாரர்/உடன் கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) ஆகியோர் கீழ்க்கண்ட ஈடு பெற்ற ஆஸ்திகளை எம்எச்எப்சிஎல் வசம் அடமானமாக வைத்துள்ளனர்.

வ. எண்	கடன்தாரர்/ உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	செலுத்த வேண்டிய மொத்த தொகை	ஈடுபெற்ற ஆஸ்திகள்/அசையா சொத்துக்கள் விவரம்
1.	வினோத் பாபு ஏழுமலை ரீட்டா ஏழுமலை, Lan No.11115073828	31.12.2019	31.12.2019 அன்று ரூ.3,96,120.85/–	விழுப்புரம் – 604 001, தமிழ்நாடு, திண்டிவனம் தாலுக்கா, எறையனூர், புது காலனி தெரு, பழைய சர்வே எண்.38 11, புதிய சர்வே எண்.60 4, கதவு எண்.331

மேற்சொன்ன கடன்தாரர்கள் எம்எச்எப்சிஎல்–க்கு தொகையை செலுத்த தவறினால், சட்டப்பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ் மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகள் மீது நடவடிக்கையை எம்எச்எப்சிஎல் மேற்கொள்ளும். அதற்காக ஏற்படும் செலவுகள் மற்றும் விளைவுகள் கடன்தாரர், உடன்கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களையே சாரும்.

மேற்சொன்ன கடன்தாரர், உடன்கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மேற்சொன்ன சட்டப்படி மேற்சொன்ன ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல், குத்தகைக்கு விடுதல் போன்ற மாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகளை மீறினால் சட்டத்தின் கீழ் சிறை தண்டனை அனுபவிக்க நேரிடும் மற்றும்/அல்லது அபராதம் விதிக்கப்படும்.

இடம்: தமிழ்நாடு
தேதி: 14.07.2020

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
முத்தூட் ஹவுசிங் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

A WINNING RELATIONSHIP

CIN: L65191TN1979PLC007874

பதிவு அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், எண்.4,லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி எண்: +91 44 2499 0356

பேக்ஸ்: +91 44 2499 3272. வெப்சைட்: www.stfc.in இமெயில் ஐடி: secretarial@stfc.in

காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் (OAVM) மூலம் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் 41வது வருடாந்திர பொதுக்கூட்டம்

1. ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் உறுப்பினர்களுக்கான 41வது வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு (AGM) உறுப்பினர்கள் பொது இடத்தில் நேரடியாக பங்கேற்காமல், காணொலி காட்சி ("VC")/பிற ஆடியோ காட்சி வழிமுறைகள் ("OAVM") மூலம் கார்ப்பரேட் விவகாரங்கள்துறை அமைச்சகத்தால் ('MCA சுற்றறிக்கைகள்') வெளியிடப்பட்ட 5 மே 2020 தேதியிடப்பட்ட 20/2020, 13 ஏப்ரல் 2020 தேதியிடப்பட்ட 17/2020 மற்றும் 8 ஏப்ரல் 2020 தேதியிட்ட 14/2020 சுற்றறிக்கைகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013ன் ('சட்டம்') பொருந்தக்கூடிய விதிகளின்படியும் மற்றும் SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015 (''செபி பட்டியல் கட்டுப்பாடுகள்'')ன் கீழ் ஜூன், 15, 2020 தேதியிட்ட அறிவிப்பில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு வர்த்தகம் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக 19 ஆகஸ்ட், 2020 புதன்கிழமை அன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள்.
2. கம்பெனி/வைப்பு பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மேற்சொன்ன MCA சுற்றறிக்கைகள் மற்றும் 12 மே 2020 தேதியிட்ட SEBI சுற்றறிக்கை ஆகியவற்றின் கீழ் நிதி ஆண்டு 2019-20க்கான வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு ஆகியவற்றுக்கான மின்னணு நகல் அனுப்பி வைக்கப்படும்.
3. மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தற்காலிகமாக கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரான, இன்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (''இன்டகிரேட்டட்'') ஆகியோரிடம் பதிவு செய்து https://www.integratedindia.in/emailupdation.aspx என்ற லிங்கை கிளிக் செய்து 2019-20ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
4. வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 2019-20ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை கம்பெனியின் இணையதளமான www.stfc.in மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்களான பிஎஸ்இ லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் தேசிய ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளமான இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com மற்றும் https://evoting.karvy.com ஆகிய இணையதளங்களிலும் கிடைக்கும் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ளவும்.
5. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகம் தொடர்பாக மின்னணு வாக்குப்பதிவு முறையில் உறுப்பினர்கள் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படும். மின்னணு வடிவில், காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் தொலைதூர வாக்களிப்பு (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு) முறையில் வாக்களிப்பது தொடர்பான விவரங்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் கம்பெனியின் இணையதளமான www.stfc.in மற்றும் கேபின் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளமான https://evoting.karvy.com-லும் உள்ளது. வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும்போது மின்னணு முறையில் வாக்களித்தல் (உடனடி வாக்கெடுப்பு) மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்கள் தொலைதூர மின்னணு வாக்குப் பதிவை பயன்படுத்தி வாக்களிக்காவிட்டால், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும்போது உடனடி வாக்குப்பதிவு முறையில் வாக்களிக்கும் வசதி வழங்கப்படும்.
6. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிப்பதற்கான உள்நுழைவு சான்றுகள் உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். மின்னஞ்சல் மூலம் கிடைக்கப்பெறாத மற்றும் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.
7. இதே உள்நுழைவு சான்றுகளை பயன்படுத்தி VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம்.
8. இயக்குனர்கள் குழு இறுதி டிவிடெண்டை பரிந்துரைக்கவில்லை. மேலும் அக்டோபர் 24, 2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் குழு ஒவ்வொரு சமபங்குக்கு ரூ.5/- என்ற இடைக்கால டிவிடெண்டை அறிவித்தது. அதுவே 2019-20ம் ஆண்டுக்கான இறுதி டிவிடெண்டாக கருதப்படும்.
9. உறுப்பினர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு 2019-20ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு ஆகியவை விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

இயக்குனர்கள் குழு சார்பாக

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–

இடம் : மும்பை
தேதி : ஜூலை 20, 2020

விவேக் அச்வால்
கம்பெனி செயலாளர்

Amarjothi Spinning Mills Ltd

பதிவு அலுவலகம்: ''அமர்ஜோதி''ஹவுஸ்'', 157, குமரன் ரோடு, திருப்பூர்–641 601. CIN: L17111TZ1987PLC002090

அறிவிப்பு

இதர அலுவல்களுக்கு இடையே, செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 47(1) (ஏ)ன்படி, 30 ஜூன் 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து பதிவு செய்யவும் மற்றும் கம்பெனி தலைவரின் ஒப்புதலை பெற்று இதர அலுவல்களை மேற்கொள்ளவும் கம்பெனியின் இயக்குனர்கள் குழுவின் 04/2020–21 கூட்டம் வெள்ளிக்கிழமை, 31 ஜூலை 2020 அன்று காலை 10.00 மணிக்கு கம்பெனியின் பதிவு அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் (http://www.amarjothi.net) மற்றும் கம்பெனியின் சமபங்குகள் பட்டியலிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் BSE லிமிடெட் (http://www.bseindia.com)லும் இந்த அறிவிப்பு உள்ளது.

அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட்டுக்காக
மோகன ப்ரியா M
கம்பெனி செயலாளர்

இடம்: திருப்பூர்
தேதி : 20.07.2020

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்

தி ஒபராய் குழும உறுப்பினர்

பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
Telephone: 91-44-2234 4747; Facsimile: 91-44-2234 6699, 91-44-2234 4985
முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு: 7 ஷாம் நாத் மார்க், டெல்லி-110054
Telephone: 91-11-2389 0505; Facsimile: 91-11-23890575
Website: www.eihassociatedhotels.in
Email: isdho@oberoigroup.com; invcom@tridenthotels.com
CIN: L92490TN1983PLC009903

அறிவிப்பு

காணொளி காட்சி/ பிற ஒலி ஒளி சாதனங்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு போன்றவற்றின் மூலம் கம்பெனியின் வருடாந்திர பொதுக்கூட்டத்தை புதன்கிழமை, 12 ஆகஸ்ட் 2020 அன்று மாலை 3.30 மணிக்கு நடத்துவது குறித்து ஆங்கில நாளேடான பிசினஸ் ஸ்டாண்டர்டு மற்றும் தமிழ் நாளேடான மக்கள் குரல் பத்திரிக்கையில் 14 ஜூலை 2020 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பை தொடர்ந்து இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுவது யாதெனில், கம்பெனி சார்பாக KFin டெக்னாலஜிஸ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டானது ("KFINTECH") வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்புடன் 2019–20 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை கம்பெனி/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் 18 ஜூலை 2020 அன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளது. வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்புடன் ஆண்டறிக்கை வலைத்தளங்கள் https://evoting.karvy.com, www.eihassociatedhotels.in, www.nseindia.com, www.bseindia.comல் கிடைக்கும்.

உறுப்பினர்கள் பதிவேடு/பங்கு பரிமாற்ற புத்தகங்கள் 5 ஆகஸ்ட் 2020 முதல் 7 ஆகஸ்ட் 2020 முடிய (இரு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும்.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு 9 ஆகஸ்ட் 2020 அன்று காலை 10.00 மணிக்கு தொடங்கி 11 ஆகஸ்ட் 2020 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது மற்றும் அதன்பின்னர் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவை KFINTECH நிறுத்திவிடும். மின்னணு முறையில் வாக்களிக்க தகுதி உள்ளவர்களை தீர்மானிக்கும் கட் ஆப் தேதி செவ்வாய்க்கிழமை, 4 ஆகஸ்ட் 2020. கூட்டத்திற்கு முன்பாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமையில்லை.

கம்பெனியின் பங்குகளை பெற்று அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் உறுப்பினராக நபர் மற்றும் கட் ஆப் தேதியான செவ்வாய்க்கிழமை, 4 ஆகஸ்ட் 2020 அன்று பங்குகளை வைத்துள்ளவர் அவர்களது போலியோ எண்/ DP ID and Client ID ஆகியவற்றை குறிப்பிட்டு evoting@kfintech.comக்கு மின்னஞ்சல் அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை பெற்றுக் கொள்ளலாம். எனினும், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவிற்காக ஏற்கனவே KFINTECH–உடன் பதிவு செய்திருந்தால் நீங்கள் உங்களது தற்போதைய உபயோக ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

மின்னஞ்சல் மூலமாக வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையை பெறுவது தொடர்பாக ஏதேனும் உறுப்பினர்களுக்கு ஏதேனும் குறை மற்றும்/அல்லது சந்தேகம் இருப்பின் அவர்கள் திரு. D.S.நாகராஜா, துணை மேலாளர், KFin டெக்னாலஜிஸ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், செலினியம், மனை எண். 31 மற்றும் 32, கச்சிபோவ்லி, நிதி மாவட்டம், நானக்ரம்குடா, ஐதராபாத் 500032 அவர்களை அணுகலாம் அல்லது einward.ris@kfintech.com மற்றும் evoting@kfintech.com அல்லது தொலைபேசி எண். 040-6716 2222 அல்லது KFINTECH கட்டணமில்லா எண் 1800-3454-001ஐ அணுகலாம். அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) மற்றும் https://evoting.karvy.com(KFINTECH வலைத்தளம்)ன் பதிவிறக்க பிரிவில் கிடைக்கும் மின்வாக்களிப்பு பயனர் கையேட்டையும் உறுப்பினர்கள் பார்வையிடலாம்.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– **இந்த்ராணி ரே**
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி : 20 ஜூலை, 2020

FIRST FINANCIAL SERVICES LIMITED

(Regd. Office: 52, F-3, 1st Floor, Diamond Block, Gandhi Main Road, Sri Krishna Vatika Appt, Puzhal, Thiruvallur, Chennai-600066, Tamil Nadu, India
CIN: L85100TN1984PLC011231 , Tel No. +91-44-28415438, 28415439,42145840,
E-Mail: firstfinancialserviceslimited@gmail.com, Website: www.ffslonline.com

Recommendations of the Committee of Independent Directors (IDC) on the Open Offer to the Shareholders of the FIRST FINANCIAL SERVICES LIMITED ("FFSL" or the "Target Company")

1	Date	**July 20,2020**
2	Name of the Target Company	**FIRST FINANCIAL SERVICES LIMITED**
3	Details of the Offer pertaining to Target Company	Open Offer for acquisition of up to 1,61,49,520 fully paid-up equity shares ("Open Offer Shares") of face value of ₹ 1.00 (Rupee One) each representing 20.00% of the equity share capital/voting capital of First Financial Services Limited Hereinafter referred to as "Target Company" Or "FFSL"),.
4	Name(s) of the Acquirers & PACs	Mr. Bhagawati Prasad Jhunjhunwala ("ACQUIRER 1"), Mrs Mala Jhunjhunwala ("ACQUIRER 2"), Ms. Ruhi Jhunjhunwala ("ACQUIRER 3"), along with Skyed Network Private Limited ("PAC 1"), Anurodh Merchandise Private Limited ("PAC 2"), Radhasoami Resources Private Limited ("PAC 3") BPJ Holding Private Limited ("PAC 4") and Nandlal Vyapaar Private Limited ("PAC 5") (hereinafter referred to as the "ACQUIRERS AND PAC'S").
5	Name of the Manager to the Offer	**CAPITALSQUARE ADVISORS PRIVATE LIMITED** SEBI REGN NO: INM000012219 (Contact Person: Mr. Tanmoy Banerjee) 208, 2nd Floor, AARPEE Center, MIDC Road No 11, CTS 70, Andheri (E), Mumbai 400093, Maharashtra,India Phone No +91-22-66849999; Fax : +91-22-66849998 Email: tanmoy.banerjee@capitalsquare.in Website: www.capitalsquare.in
6	Members of the Committee of Independent Directors ("IDC")	Mr. Girishkumar Dalshukhram Panchal, Chairman of the Committee; 1) Mr. Selvaraj Selvam Arumai, Member
7	IDC Member's relationship with the Target Company (Director, Equity shares owned, any other contract/ relationship), if any	None of the Members of the IDC hold any equity shares in the Target Company nor have any relationship with the other Directors of the Target Company and apart from being the directors of the TC they are not related to each other in any manner.
8	Trading in the Equity shares/other securities of the Target Company by IDC Members	No trading has been done by the IDC Members in the Equity Shares/ Other Securities of the Target Company since their appointment.
9	IDC Member's relationship with the Acquirers/PACs (Director, Equity shares owned, any other contract/ relationship), if any.	None of the IDC Members have any relationship with the Acquirers/PACs.
10	Trading in the Equity shares/other securities of the Acquirers/PACs by IDC Members	Not Applicable
11	Recommendation on the Open offer, as to whether the offer , is or is not, fair and reasonable	Based on the review of PA, DLOF and LOF issued by the Manager to the Offer on behalf of the Acquirers and PACs, IDC Members believe that the Open Offer is in accordance with the SEBI (SAST) Regulations and to that extent is fair and reasonable.
12	Summary of reasons for recommendation	Based on the review of PA and DLOF, LOF and Corrigendum to PA, IDC has considered the following for making its recommendation: a. Offer Price includes interest @ 10% per annum per Equity Share for the delay in the payment beyond the Scheduled Payment Date. b. Offer Price is justified in terms of Regulation 8(2) of the SEBI (SAST) Regulations. Keeping in view the above fact IDC is of the view that the Offer Price of ₹ 1.40/- plus interest @10% per annum i.e. ₹ 1.40 per share shall be payable to the eligible shareholders, who are the shareholders as on the date of violation i.e. June 02, 2010 is fair and reasonable. However, the shareholder should independently evaluate the offer and take informed decision in the matter.
13	Details of Independent Advisors, if any.	Nil
14	Any other matter to be highlighted	Nil

To the best of our knowledge and belief, after making proper enquiry, the information contained in or accompanying this statement is, in all material respect, true and correct and not misleading, whether by omission of any information or otherwise, and includes all the information required to be disclosed by the Target Company under the SEBI (SAST) Regulations.

For and on behalf of
The Committee of Independent Directors of
FIRST FINANCIAL SERVICES LIMITED
Sd/-
(Girishkumar Dalshukhram Panchal)
Chairman- Committee of Independent Directors

Place: Chennai
Date: July 20, 2020